விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே எங்களுக்குச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதையும் கவனத்திலே எடுத்து, அது குறித்து அரசு ஆவன செய்யும் என்பதை இந்த வேளையிலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 143, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

143—

ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

***36357—திரு. கே.வி. சேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போளூர் தொகுதி, பெரணமல்லூர் ஒன்றியம், பெரியகொழப்பலூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டி, 60 படுக்கைகள் கொண்ட பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

போளூர் தொகுதி, பெரணமல்லூர் ஒன்றியம், பெரியகொழப்பலூரில் இயங்கக்கூடிய அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 2018–2019 ஆம் ஆண்டிலே எழுப்பப்பட்ட கேள்விக்குப் பின்னால், 60 இலட்சம் ரூபாய்க்குப் புதிய கட்டடம் கட்டப்பட்டு, இப்போது நோயாளிகளின் பயன்பாட்டில் உள்ளது. ஒரு மாதத்திற்கு 11 பிரசவங்கள் நடக்கக்கூடிய, நல்ல முறையிலே செயலாற்றக்கூடிய மருத்துவமனை. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் இன்னும் என்ன கோரிக்கைகளை வைக்கிறார்களோ அதை அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 மார்ச் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.

திரு. கே.வி. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்றும் எங்கள் நினைவில் வாழும் தலைவர் கலைஞர் மற்றும் பேராசிரியர் ஆகியோரை வணங்குகிறேன். எங்கள் கழகத் தலைவர் மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்களுக்கு பணிவன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. குமரகுரு) தலைமை]

போளூர் சட்டமன்றத் தொகுதி, பெரணமல்லூர் ஒன்றியம், பெரியகொழப்பலூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் கடந்த 2001–2006 ஆம் காலக்கட்டத்தில் 30 படுக்கை வசதிகளுடன்கூடிய மருத்துவமனையாக அறிவிக்கப்பட்டது. பிறகு பெரணமல்லூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகளுடன்கூடிய மருத்துவமனையாக மாற்றப்பட்டுள்ளது. ஆனால், பெரியகொழப்பலூரில் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகளுடன் இயங்கி வருவதாகத் தற்போது கூறப்பட்டுள்ளது. அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் சாதாரண சுகாதார நிலையமாகத்தான் இயங்கி வருகிறது. நான் கேட்டுக்கொள்வது, மக்களின் நலன் கருதி, இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக மாற்றித் தர வேண்டுமாய் மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. குமரகுரு): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பெரியகொழப்பலூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை அரசின் நிதிநிலைமைக்கேற்ப, வருங்காலங்களில் கனிவோடு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. குமரகுரு): மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.

[2020 மார்ச் 20

திரு. கே.வி. சேகரன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பெரியகொழப்பலூர் ஆரம்ப சுகாதார நிலையம், நல்ல விஸ்தாரமாக 3 ஏக்கர், 30 சென்ட் பரப்பளவில் இட வசதியுடன் அமைந்துள்ளது. இந்த மருத்துவமனையில் தினந்தோறும் 350 முதல் 400 வரையிலான நோயாளிகள் வருகைத்தந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். இந்த மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் தங்குவதற்கான வசதி வாய்ப்புகளைச் செய்துதர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இம்மருத்துவமனைக்கு சுமார் 500 மீட்டர் நீளத்திற்கு சுற்றுச் சுவர் அமைத்துத் தருமாறு இந்த அரசை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. குமரகுரு): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது 60 இலட்சம் ரூபாயில் OP block–க்கு புதிய கட்டடம் கட்டப்பட்டு, அது திறக்கப்பட்டு பயன்பாட்டில் இருக்கின்றது. சுற்றுச் சுவர் கட்டுவதற்கு இந்த நிதியாண்டில், கனிவோடு பரிசீலித்து, அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. குமரகுரு): மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.

திரு. கே.எஸ். மூர்த்தி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எனது பரமத்தி–வேலூர் தொகுதியின் மைய இடமான வேலூர் அரசு மருத்துவமனையில் 1936, 1942 ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்ட பழமையான கட்டடத்தில், 50 படுக்கை வசதிகள் கொண்ட உள்நோயளிகள் பிரிவு செயல்பட்டு வருகின்றது. அது தற்போது இடிந்து விழும் தருவாயில் உள்ளது. புதிய கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக, பொதுப் பணித் துறைமூலம், தடையில்லா சான்று பெறப்பட்டு, சுகாதாரத் துறைக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளி நோயாளிகள் மற்றும் உள் நோயாளிகள் பயன்பெறும் வகையில், புதிய கட்டடங்களைக் கட்டித் தர வேண்டும். மேலும், அந்த மருத்துவமனையைத் தாலுகா

2020 மார்ச் 20]

மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தருமாறு மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. குமரகுரு): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, பரமத்தி–வேலூருக்கு புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டிருக்கின்றோம். ஏற்கெனவே உள்ள பழைய கட்டடங்களை இடித்துவிட்டு புதிய கட்டடங்கள் கட்டுவதற்குண்டான கருத்துரு பெறப்பட்டிருக்கிறது. அரசின் கனிவான பரிசீலனையில் அது இருக்கிறது என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. குமரகுரு): மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் மருத்துவத் துறையை இந்தியாவிற்கே வழிகாட்டும் துறையாக மாற்றிக் காட்டியிருக்கின்ற, தமிழகத்தின் ஒப்பற்ற மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், அருமை அண்ணன் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். காட்டுமன்னார்கோவில் தொகுதியில் அமையப்பெற்றிருக்கின்ற லால்பேட்டை, முழுக்க, முழுக்க இஸ்லாமியர்கள் நிரம்பப் பெற்றிருக்கின்ற பேரூராட்சி. அந்தப் பேரூராட்சியில் இருக்கக்கூடிய இஸ்லாமியப் பெருமக்களும், பொது மக்களும் அங்கே புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்து, புதிய கட்டடங்களைக் கட்டித் தரக் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு ஸ்ரீமுஷ்ணம் புதிய வட்டமாக உருவாகியிருக்கின்றது. அங்கேயிருக்கிற 30 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையை, வட்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்பேட்டையில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்பது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய பிரதான கோரிக்கை என்பதை நான் நன்கறிவேன். ஆகவே, நிச்சயமாக தங்களுடைய சட்டமன்றத் தொகுதிக்கு, குறிப்பாக, இஸ்லாமியர் வசிக்கின்ற அந்தப் பகுதிக்கு, சட்டமன்ற உறுப்பினர் மூலமாக, விரைவில் தாங்கள் ஒரு நல்ல செய்தியை நம்பிக்கையோடு சொல்லலாம் என்று நான் இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே ஒருமுறை இதே அவையில் இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறீர்கள். அதனடிப்படையில் அவருடைய கோரிக்கையை மிகுந்த கனிவோடும், முன்னுரிமை அடிப்படையிலும், அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

ஸ்ரீமுஷ்ணம் மருத்துவமனையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கிறார், ஸ்ரீமுஷ்ணம் தாலுகா மருத்துவமனையை வட்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்துவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி தொகுதி, அடையார், வெங்கட்ரெத்தினம் நகரில் ஆரம்ப சுகாதார மகப்பேறு மருத்துவமனை இயங்கி வருகின்றது. நோயாளிகள், கர்ப்பிணிப் பெண்கள் அதிகளவில் வரும் மருத்துவமனையாக இது இருக்கிறது. ஆனால், அந்த மருத்துவமனையில் பல்வேறு அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தினால், நோயாளிகளும், மருத்துவர்களும் சிரமப்படுகிறார்கள். குழந்தைகள் பெறும் தாய்மார்களுக்கு A.C. அறைகள் இல்லை, Generator வசதி அமைக்கப்படவில்லை. மின் விசிறிகள் குறைவாக உள்ளன. மருந்து, மாத்திரைகள் வைப்பதற்கு shelves இல்லை. சுற்றுச் சுவர் முழுமையாகக் கட்டப்படவில்லை.

Main gate இல்லாமல் திறந்து கிடக்கிறது. இதனால், இரவு நேரங்களில் தேவையற்ற செயல்கள் நடைபெறுவதற்கு இந்த இடத்தினைப் பயன்படுத்துகின்றார்கள். இம்மருத்துவமனை அடையாறின் முக்கியப் பகுதியில் அமைந்திருக்கிறது. எனவே, மேற்குறிப்பிட்ட தேவைகளையும், compound சுவர், main gate ஆகியவற்றையும் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை உள்ளாட்சித் துறையின் கீழுள்ள, சென்னை மாநகராட்சிக்குட்பட்டது. இருப்பினும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு உடனடியாக எடுத்துச் சென்று, Deputy Commissioner, Health, சென்னை மாநகராட்சியின் இணை இயக்குநர் ஆகியோரிடம் தெரிவித்து, உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

முற்பகல் 11–10

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நட்டாலம் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்தித் தர வேண்டும். உண்ணாமலைக்கடை, களியக்காவிளை, பளுகல் மற்றும் குழித்துறை ஆகிய பகுதிகளில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அவற்றிற்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட ஆவன செய்ய வேண்டும். கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டுள்ள கேரள மாநில எல்லையையொட்டி கன்னியாகுமரி மாவட்டம் அமைந்துள்ளதால், கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் Isolation Ward ஏற்படுத்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகைக் கட்டடங்களில் செயல்படும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. அங்கே இடப் பிரச்சினைகள் இல்லாதபட்சத்தில் உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்வதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் குறித்து ஆய்வு செய்து, உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். Isolation Ward பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார். இன்று காலையில், நான், தலைமைச் செயலாளர் ஆகியோர் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் கன்னியாகுமரி மருத்துவமனை Dean ஆகியோருடன், video conferencing மூலமாகப் பேசினோம். கன்னியாகுமரி மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 30 படுக்கைகள் தற்போது தயார் நிலையில் இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டம், கேரள மாநில எல்லையையொட்டி அமைந்திருப்பதால், கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து, அரசு சார்பில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கூடுதலாக instructions கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 144, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

144—

எள்ளுக்கு உரிய விலை

***51876—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதியில் உற்பத்தி செய்யப்படும் எள்ளுக்கு உரிய விலையை நிர்ணயிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?